UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
[illegible]
PERIODICALS DIVISION
LIBRARY

பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 22 | புரட்டாதி 21 | ஜுல்-கஃ 26 | இதழ் 238
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 7 - 10 - 80

## பாடப்புத்தக விநியோகம் நவம்பர் 15-ல் ஆரம்பம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான இலவச பாடப் புத்தக விநியோகம் அடுத்த மாதம் பதினைந்தாம் திகதி ஆரம்பமாகும்.

இலவச பாடப் புத்தகங்களை டிசம்பர் மாத விடுமுறைக்கு முன்னதாகவே விநியோகிக்க கல்வி அமைச்சு முடிவுசெய்திருப்பதைத் தொடர்ந்தே விநியோகவேலைகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கின்றன.

பாலர் வகுப்புக்கு புதிய பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படும்.

## ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் அனுதாபம்

(கொழும்பு)

முன்னாள் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் மறைவு குறித்து அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில்; சேர் ஜோன் கொத்தலா

(8-ம் பக்கம் பார்க்க)

# மாவட்ட அபி. சபை தேர்தலை தமிழ்காங்கிரஸ் பகிஷ்கரிக்கும்?

## இளைஞரின் வற்புறுத்தலால் முன்னையமுடிவு பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தலை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பகிஷ்கரிக்கும் என்று தெரியவருகிறது.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை காங்கிரஸ் எதிர்த்தாலும் தேர்தலில் போட்டியிடவேண்டுமென்று காங்கிரஸ் தலைமைப்பீடம் தீர்மானித்து ஏன் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதை விளக்கி ஓர் அறிக்கையும் வெளியிட்டது.

ஆனால் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணியினர் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை எதிர்க்கவேண்டுமென்றும் இச்சபைகளுக்கான தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் தலைமைப்பீடத்தை வற்புறுத்திவருகின்றனர்.

காங்கிரஸ் வாலிப முன்னணியின் கொக்குவில் கிளைச் செயலாளர் இதுபற்றிப் பத்திரிகைகளிலும் அறிக்கை விட்டிருந்தார்.

முன்னர் காங்கிரஸ் தலைவர் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் மாவட்ட சபைகளையே எதிர்த்தாரென்றும் அவரைப் பின்பற்றி மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தல்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் வாலிபமுன்னணியினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இதைத் தொடர்ந்து காங்கிரஸ் தலைமைப்பீடம் தனது முன்னையமுடிவை மீண்டும் மறுபரிசீலனை செய்ய விருப்பதாகவும் அநேகமாக தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்று முடிவு செய்ய வேண்டியேற்படலாமென்றும் காங்கிரசின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## ஈரான், பாகிஸ்தானை சோவியத்யூனியன் தாக்கும்

### பாக். அதிபர் அச்சம்

இஸ்லாமாபாத், அக் 6

சோவியத் யூனியன் பாகிஸ்தான் மீதும் ஈரான்மீதும் எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என பாகிஸ்தான்அதிபர் ஜெனரல் ஷியாவுல்ஹக் தெரிவித்துள்ளார்.

சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

ஜெனரல் ஹக் அப்பேட்டியில் மேலும் கூறியதாவது:-

விரும்பிய வேளையில் ஈரான் மீது தலையிடக்கூடிய நிலையில் சோவியத் யூனியன் தற்போது இருக்கிறது. ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் நிலைகொண்டிருப்பதும் சோவியத் யூனியனின் இராணுவ பலமும் இதற்கு உறுதுணையாக இருக்கிறது. (இ)

## வவுனியா கொள்ளை மூவர் கைது!

(வவுனியா)

வவுனியாவில் இடம்பெற்ற பஸ் கொள்ளை தொடர்பாக சுகதபாலா என்பவர் மதவாச்சி வைத்தியசாலையிலுள்ள வார்ட் ஒன்றில் சிகிச்சை பெற்றுவருகையில் வவுனியாப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டார்.

இக் கொள்ளை தொடர்பாக மேலும் இரு நபர்களான கிரிபுண்டா, கே. தனபால ஆகியோர் பாவற்குளத்தில் வைத்து வவுனியா தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. கே. ஆரியதிலகாவினால் கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து பஸ் கண்டக்டரின் மணிக்கூடும், கொள்

(8ம் பக்கம் பார்க்க)

## தனிநாயகம் அடிகளார் இரங்கற்கூட்டம்

(கொழும்பு)

தவத்திரு தனிநாயக அடிகளாரின் இரங்கற்கூட்டம் இன்று மாலை கொட்டாஞ்சேனை விவேகானந்த மண்டபத்தில் நடைபெறும்.

கிறிஸ்தவ தமிழ்ப்பண்பாட்டு பேரவையின் தலைவி சகோதரி சென்ற் பியர்டேமியன் தலைமையில் நடைபெறும் இந்த இரங்கற் கூட்டத்தில் எதிர்க் கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இரங்கற்கூட்டத்தில் திரு. ஆ. தேவராசன் எழுதிய 'தமிழ்த் திரு. தனிநாயகம் அடிகள்' நூல் வெளியீடு வைபவமும் இடம்பெறும். திரு. அ. அமிர்தலிங்கம் இந்த நூலை வெளியிட்டுவைப்பார். சிறப்புப் பிரதியை திரு. வி. எஸ். துரைராஜா பெற்றுக்கொள்வார். (ம)

## யாழ். மாவட்ட அபிவிருத்தி கூட்டணிக்கு அக்கறையில்லை

### அமைச்சர் காமினி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''யாழ்மாவட்டத்தின் அபிவிருத்தியில் கூட்டணியினருக்கு அக்கறையில்லை. யாழ். மாவட்டத்தின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட 220 லட்சம் ரூபாவில் 50 லட்சம் ரூபாவை மட்டுமே கூட்டணி எம். பிக்கள் செலவிட்டனர். மிகுதி திறைசேரிக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தின் அபிவிருத்தியில் கூட்டணி எம்.பிக்களுக்கு உண்மையான அக்கறையிருந்திருந்தால் மிகுதிப் பணம் திரும்பிச் செல்ல விட்டிருப்பார்களா?''

இவ்வாறு காணி, கணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸநாயக்கா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். பாடசாலை மாணவர் மத்தியில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுகையில் கூறினர்.

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் செல்வன் எஸ். நிர்மலன் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''ரியூட்டரிகளைப் போலவே இன்றைய பல்கலைக்கழகங்களும் செயற்படுகின்றன. ரியூட்டரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், மாணவர்கள் கல்வி கற்பதற்குப் பதிலாகத் தேவையற்ற விடயங்களில் தலையிட்டுத் தமது [illegible] வீணாக்குகிறார்கள்'' என்[illegible] கூட்டத்தின் தலைவர் [illegible]

(8ம் பக்கம் பார்க்க)

## கொரம்ஷார் துறைமுக நகர் ஈராக் படையிடம் வீழ்ச்சி!

### எண்ணை ஆலை, விமானத்தளங்கள் மீது விமானத் தாக்குதல்

லண்டன், அக். 6

ஈரானின் தென்மேற்குப் பகுதியான கொரம்ஷர் நகரை ஈராக் துருப்புக்கள் இன்று கைப்பற்றிக் கொண்டன. ஈராக்கின் பிரதான துறைமுக நகரமான கொரம்ஷர் ஈரானின் கட்டுப்பாட்டில் இருப்பதை வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களும் இன்று ஊர்ஜிதம் செய்தன. ஈராக் படைகள் ஈரானுக்குள் புகுந்து எண்ணை உற்பத்தி செய்யும் நிலையங்களையும் விமானத் தளங்களையும் கோரமாகத் தாக்கிவருகின்றன என்று ஈராக் இராணுவபீடம் அறிவித்துள்ளது.

### 20 ஈரான் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன

இந்தச் சண்டையில் 20 ஈரானிய விமானங்கள் ஈராக் பீரங்கிகள் சுட்டு வீழ்த்தியுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] யுள்ள விமான நிலையம் ஒன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த 2 இராட்சத விமானங்களை ஈராக் விமானங்கள் சேதப்படுத்தியுள்ளன என்று ஈராக் அறிவித்துள்ள அதே வேளையில் இச்செய்தியை ஈரான் மறுத்துள்ளது.

### சவூதி அரேபிய உதவி வழங்க முன்வருகிறது

இதே வேளையில் சண்டையை உடன் நிறுத்துமாறு சவூதி அரேபியா இருநாடுகளையும் கேட்டுள்ளது.

ஈராக்குக்கு எதிரான தாக்குதல் விரிவடைந்து வேறு அரபு நாடுகளை ஈரான் தாக்க முயன்றால் ஈரான் தாக்கும் நாடுகளுக்கு சவூதி அரேபியா உதவி வழங்கும் என்றும் சவூதி அரேபியா தெரிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க 'ஹோர்மோஸ்' நீரிணைவழி எண்ணை ஏற்றிச் செல்லும் கப்பல்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## நன்றி நவிலல்

எனது கணவர் திரு. இராசரத்தினத்தின் இறுதிச் சடங்கில் நேரில் பங்குபற்றியவர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர்க்கும் என் இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி R P. இராசரத்தினம். ஆனந்தபதி, கோண்டாவில். 7007

இ. சிவசுப்பிரமணியம்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

## அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணித்த யாழ்ப்பாணம் நல்லூர் இல.14, குறுக்குவீதியைச் சேர்ந்த நல்லதம்பி கனகரத்தினம் என்பவரின் ஆதனங்களும் மற்றும் பெறுமதிகளும் சம்பந்தப்பட்ட விடயமாக.

கனகரத்தினம் கைம்பெண் சந்திரவதி இல 14, குறுக்குவீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
— மனுதார்

இல, தத்துவம்: 3546

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும், 1980ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24-ந் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றூர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
ஒப்பம்
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

வரைவு:
**இ. சிவசுப்பிரமணியம்,**
மனுதாரின் சட்டத்தரணி.
6614

## வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 7000 க்கும் மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 25-00 மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 15-10-80 ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிக்கு முன்னதாக பதிவுத் தபால்மூலம் "பொது முகாமையாளர், கட்டைவேலி —நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால் உறையில் இ-து பக்க மேல்மூலையில் "வெற்றுச் சாக்குக்கான கேள்வி" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்,
கட்டைவேலி—நெல்லியடி
ப. நோ. கூ. சங்கம்.
கரவெட்டி,
2-10-80.
7008

"மாவட்ட அபிவிருத்திச் சபைகளால்

# தமிழ்ப்பாடசாலைகளின் குறைகளைத் தீர்க்கலாம்"

## 'அமிர்' நம்பிக்கை

(சித்தன்கேணி)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள்மூலம்தமிழ்ப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் எல்லாக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யலாம்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினூர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"யாழ் மாவட்டத்திலும் மற்றைய தமிழ்ப்பாடசாலைகளிலும் தமிழ் ஆசிரியர்கள் பற்றுக் குறையாக இருக்கின்றூர்கள். ஆனுல் அரசாங்கம் தமிழ் ஆசிரியர்கள் நியமனத்தில அக்கறை கொள்ளவில்லை. இதுபற்றி நாங்கள் பாராளுமன்றத்திலும் நேரடியாகவும் பலமுறை அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றேம். இந்த நிலை மாறி தமிழ்ப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலுள்ள பாடசாலைகள் முன்னேறுவதற்கு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பெரிதும் உதவும். மாவட்ட சபைகள் மூலம் தமிழ்ப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் எல்லாக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யலாம்.

பாடசாலை மண்டபத்தில் அதிபர் திரு. வே. தம்பையா தலைமையில் நடைபெற்ற. இவ் விழாவை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். ஆசிரியை திருமதி பா. செல்லையா வரவேற்புரை நிகழ்த்தினூர்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசும்போது "எனது தொகுதியில் இப்பாடசாலை அமைந்திருக்கும் இடம் கேந்திரமாக விளங்குகின்றது. இப்பாடசாலையில் பல சங்கங்களின் கூட்டங்களும் போக்குவரத்து வசதிகருதி நடைபெறுவதை யான் அறிவேன். ஆகவே இப் பாடசாலைக்கு போதிய கட்டிட வசதி தளபாட வசதிபெற்றுத்தருவது எனது கடமை. பாடசாலைக்கான காணிபற்றுக குறையாக இருப்பதனுல் அதனை உடனடியாக பெற்றுத்தர ஆவன செய்வேன்" என்றூர். (கு)



## "அபிவிருத்தி வேலைகளுக்கு கி. அ. சங்கம்"

(அச்சுவேலி)

"கிராம அபிவிருத்திச் சங்கம் அமைப்பதன்மூலம் தான் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளலாம். சுகாதாரத்தைப் பேணுவதற்கு ஒவ்வொரு வீட்டிலும் குழி மலசலகூடங்கள் அமைக்கப்படவேண்டும். தேசிய இளைஞர் சேவைமன்ற மூலம் உதவி பெற்று பழுதடைந்த ஒழுங்கைகளை திருத்தி அமைக்க நாம் முயற்சியெடுக்க வேண்டும்."

அச்சுவேலி - பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகையில் திரு. எம். பொன்னுத்துரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: எம். பொன்னுத்துரை, காரியதரிசி: பொ. இரத்தின வடிவேலன், தனுதிகாரி: து. கந்தசாமி. 9 பேர் நிர்வாகிகள்.

## தொழிலாளி பதவி

(சமயோசிதம்)

மேற்படி பதவிக்கு கீழ்க்காணும் தகமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வயதெல்லை: 20தொடக்கம் 40 வயது வரை.
2. கல்வி: குறைந்தது 5-ம் வகுப்பு சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.
3. நல்ல தேக ஆரோக்கியமுடையவராய் இருத்தல் வேண்டும்.
4. நல்லொழுக்கமுள்ள இலங்கைப் பிரசையாய் இருத்தல் வேண்டும்.

சம்பளம், சேவை அனுபவம், ஆற்றலைப் பொறுத்து பின்பு தீர்மானிக்கப்படும்,

தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்னும் விலாசமிடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் 24-10-80க்குப் பிந்தாமல் விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தலைவர்.

புலோலி பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை. 7010.

## காப்பைத் திருடியவர் றிமாண்டில்

(பண்டத்தரிப்பு)

இரண்டு வயது பெண்பிள்ளையின் கையில் அணிந்திருந்த 2000 ரூபா பெறுமதிமிக்க பவுண்காப்புகளைத் திருடியதாக குற்றம் சாட்டி சங்கானைப் பொலிசாரினுல் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்தபோது நீதிபதி அவரை இம்மாதம் 14ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். சுழிபுரத்தைச் சேர்ந்த சிவராசா பாக்கியத்தின் புகாரையடுத்து சங்கானை பொலிசார் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குணம் என்பவரை சந்தேகத்தின்பேரில் கைது செய்தனர். அத்துடன் களவாடப்பட்ட காப்புகளையும் அவரிடமிருந்து கைப்பற்றினர்.

இந்த நபரை பொலிசார் மல்லாகம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்தபோது சந்தேகநபர் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதை அடுத்து அவரை எதிர்வரும் 14ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (கு)

## விளையாட்டுப் போட்டி

(மன்னூர்)

விளையாட்டு அமைச்சினுல் நடாத்தப்படும் தேசிய விளையாட்டு விழாவையொட்டி மன்னூரில் உதைபந்தாட்டப் போட்டி, கரபந்தாட்டப் போட்டி, கிரிக்கெட் போட்டி என்பன நடத்தப்படவிருக்கிறது. (கு)

## சிறுபான்மை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கைகொடுத்து உதவி அருங் கல்விச்சேவை செய்தவர்கள், கத்தோலிக்க மிஷனரிமார்கள். இந்த உண்மையினை நாம் மறந்துவிடக்கூடாது"

மற்றும் பருத்தித்துறை எம். [illegible] இ. கனேசமூர்த்தி, மு. [illegible] ராஜா ஆகியோரும் பேசினர்கள். (கு)

## 'அமிர்' வெற்றிக்கேடயம்

(மன்னூர்)

அடம்பன் "ஸ்கைலாட்ஸ்" விளையாட்டுக்கழகம் நடாத்திய அமிர்தலிங்கம் வெற்றிக் கேடயத்திற்கான இறுதி உதைபந்தாட்டப்போட்டியில் வங்காலை புனிதஆனுள்கழகம்பள்ளிமுனை புனித. லூசியாஸ் கழகத்தை 2:0 கோல்களால் வெற்றிபெற்றது. (சு)

## பூநகரியில் காமினிக்கு வரவேற்பு

(பூநகரி)

பூநகரிக்கு விஷயம் செய்த காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவை கேரதீவில் வைத்து யாழ். பிரதம பொறியியலாளர் திரு. எஸ். கணேசரத்தினம் பூநகரி நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. எஸ். இராமக்கிருஷ்ணன், நிறைவேற்றுப்பொறியியலாளர், அலுவலக ஊழியர்கள் மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு விஷயம் செய்த அமைச்சர் பூநகரிஉதவி அரசாங்க அதிபர் திரு எஸ். வைத்திலிங்கம் தலைமையில் மரநாட்டுவைபவத்தில் கலந்து கொண்டார். (கு)

லாலா சோப் ஸ்தாபனத்தாரின்

## முக்கிய அறிவித்தல்

எமது வியாபார வாகனத்தில்
விற்பனையாளராகக் கடமையாற்றிய
என். ரட்ணம் என்பவரை
8-9-80 தொடக்கம் வேலையிலிருந்து
நிறுத்தியுள்ளோம்
எனவே ஸ்தாபனங்கள், தனிப்பட்டவர்கள் அவருடன்
செய்துகொள்ளும் கொடுக்கல், வாங்கல்களுக்கு
நாங்கள் பொறுப்பேற்கமாட்டோம் என்பதை இத்தால்
சகலருக்கும் அறியத்தருகின்றேம்,
உரிமையாளர்,
**லாலா சோப் தொழிற்சாலை,**
அச்சுவேலி. 7011

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வெற்றுச்சாக்கு

## கேள்விப்பத்திரம்.

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் வரும் வகையான வெற்றுச்சாக்குகள் விற்பனைக்காக கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புவோர் தலைவர், புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 15-10-80-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம்" என குறிப்பிடல் வேண்டும். கேள்விப்பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 250/- செலுத்துதல்வேண்டும். வைப்புப் பணம் இடாதோரின் கேள்விப்பத்திரம் எதுவித காரணத்தையிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இதற்கான வைப்புப் பணத்தையும் விண்ணப்பப் படிவத்திற்கான ரூபா 2 -ம் செலுத்தி இதற்குரிய படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம், இதற்கான பணத்தை நேரடியாகவோ அன்றேல் தபால் கூாசுக் கட்டளை மூலமாகவோ அனுப்பி வைத்தால் இதற்கான விண்ணப்பப்படிவம் உரியவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

விபரம்

| | | |
|---|---|---|
| 1. | மா அலசல் | 510 |
| 2. | மா சிங்கப்பூர் | 96 |
| 3. | சீனி 2 அந்தர் | 230 |
| 4. | சீனி 1 அந்தர் | 115 |
| 5. | மா எஸ். எம். சீ. | 24 |
| 6. | நவதானியம் | 136 |
| 7. | சர்க்கரை | 48 |
| 8. | அரிசி கட்டை (இல. 2 | 210 |
| 9. | அரிசி 1 அந்தர் | 360 |
| 10. | உப்பு | 150 |
| 11. | மா 1 அந்தர் (யூ. கே.) | 114 |
| 12. | பி. எம். பி. (பெரிது) | 12 |
| 13. | கழிவு | 240 |
| 14. | சீனி பை (சீலை) | 72 |
| | | 2317 |

பொதுமுகாமையாளர்.

7009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரானுக்கு சோவியத்யூனியன் ஆயுத உதவி!

## ஈரான் நிராகரிப்பு

தெஹ்றான், அக். 6

**ஈரான்-ஈராக் யுத்தத்தில் ஈரானுக்கு ஆயுத உதவி வழங்க சோவியத் யூனியன் முன்வந்துள்ளது.**

**சோவியத்யூனியனின் இந்த ஆயுத உதவியை ஏற்க ஈரான் மறுத்துள்ளது.**

ஈரானுக்கு ஆயுத உதவி வழங்கும் சோவியத் யூனியனின் விருப்பத்தை ஈரானில் உள்ள சோவியத் தூதுவர் ஈரானியப் பிரதமர் ஜனுப் ரஜாயிடம் தெரிவித்தார். சோவியத்யூனியனின் ஆயுத உதவி தமது நாட்டுக்குத் தேவையில்லையென்றும் தங்களிடம் போதிய ஆயுதங்கள் இருக்கின்றன என்றும் ஜனுப் ரஜாய் சோவியத்தூதுவரிடம் தெரிவித்தாரென்று தெஹ்றான் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

## மே. ஜேர்மனியில் மீண்டும் சிமித் ஆட்சி!

பொன், அக். 6

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் நேற்று நடைபெற்ற பொதுத்தேர்தலில் திரு. சிமித் தலைமையிலான இடதுசாரிகளின் கலப்பு அரசு மீண்டும் பதவிக்கு வந்துள்ளது. (இ)

## ஈராக்குக்கு ஜோர்டான் உதவி

பாக்தாத் அக்.6

ஈராக்குக்கு ஜோர்டான் சகல உதவிகளையும் அளிக்கத் தயாராக இருப்பதாக ஜோர்டான் மன்னர் ஹுசெய்ன் அறிவித்துள்ளார்.

இந்தகவலை பாக்தாத் வானொலி அறிவித்தது.

ஜோர்டானின் விருப்பத்தை ஜோர்டான் மன்னர் ஹுசெய்ன் ஈராக் அதிபர் ஜனுப் சதாம் ஹுசெய்னிடம் நேரில் தெரிவித்ததாகவும் இதைத் தெரிவிப்பதற்காக மன்னர் ஹுசெய்ன் பாக்தாதுக்கு ரெகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் என்றும் மற்றுமொரு செய்தி தெரிவிக்கின்றது. (இ)

## பாக். அணுகுண்டு உற்பத்தியை இந்தியா எதிர்க்கும்

### நியூயோர்க்கில் இந்திய வெளிநாட்டு அமைச்சர்

நியூயோர்க், அக். 6

பாகிஸ்தான் அணுகுண்டு தயாரிக்கப் போவதாக செய்திகள் வந்துள்ளன. பாகிஸ்தான் மட்டுமல்ல எந்த ஒரு நாடும் அணுகுண்டு தயாரித்தாலும் இந்தியா அதனை எதிர்க்கும்.

இவ்வாறு இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. பி.வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற சர்வதேச அமைதி குறித்த மகாநாடு ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அணுசக்தியை அமைதிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படவேண்டுமென்பதில் இந்தியா தொடர்ந்தும் உறுதியாக இருக்கிறது. எனவே இந்தியாவுக்கு அணுகுண்டு தயாரிக்கும் நோக்கமும் கிடையாது. (இ)

## இந்தியாவில் வல்லரசுகள் தலையிட இந்திரா காந்தி அனுமதியார்

### ஜனதா சந்திரசேகர் புகழாரம்

புதுடில்லி, அக். 6

வல்லரசுகளாயினும் சரி, சிறிய நாடாயினும் சரி எந்த ஒரு நாட்டையும் இந்தியாவில் தலையிட பிரதமர் திருமதி இந்திராகாந்தி அனுமதிக்க மாட்டார் என நாம் உறுதியாக நம்புகிறோம்.

இவ்வாறு ஜனதா (ஜே. பி) கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

திருமதி காந்தி சோவியத் யூனியனுக்கு ஆதரவாக நடப்பதாகப் பலர் கூறுகின்றபோதும் தாம் அவ்வாறு நினைக்கவில்லையென்றும் திரு. சந்திரசேகர் கூறினர். (க)

## "மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் இயக்கம் பற்றி சிறுபான்மை தமிழரிடையே சந்தேகம் ஏற்பட்டுள்ளது"

### உடுப்பிட்டி இராசலிங்கம் கவலை

(நெல்லியடி)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் இயக்கம் பற்றி, சிறுபான்மைத் தமிழர்கள் மத்தியில் பீதியும் சந்தேகமும் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இம்மக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட உயர் சமூகத்தவர்களின் கொடுமைகளே பீதிக்கும், இச்சந்தேகத்திற்கும் காரணமாகும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், அல்வாய் வடக்கு ஸ்ரீ லங்கா வித்தியாசாலையின் வெள்ளி விழா வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் திரு. எஸ். தணிகாசலம் தலைமையிலான இவ்விழாவில் திரு. இராசலிங்கம் மேலும் பேசியதாவது:-

"மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுவோர் இத்தருணத்தில் அடக்கியொடுக்கப்பட்ட மக்களை மனிதாபிமான முறையில் அணுகவேண்டும். அதன் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதியையும்சந்தேகத்தையும் போக்கடிக்கவேண்டியது தமிழினத்தின் கடமையாகும்.

"சைவமும் தமிழும் எமது சமூகத்தவர்களால் பேணி வளர்க்கப்பட்டது. ஆனல் சைவசமயத்தவர்களால் நடாத்தப்பட்ட கல்லூரிகள் எம் சமூகத்தவர்களுக்கு கதவினைத் திறக்கத் தயங்கின. யாரெனத் தெரிந்துவிட்டால் அனுமதியை மறுத்தனர். குழாயில் நீர் குடிக்கவே அனுமதி மறுக்கப்பட்ட சம்பவங்களும் உண்டு.

(2-ம் பக்கம் பார்க்க)

## விவசாயிகள் கிளர்ச்சி

## வன்முறையை கைவிடுமாறு எம். ஜி. ஆர். கோரிக்கை

சென்னை, அக். 6

வன்முறையைக் கைவிட்டு நாட்டின் அபிவிருத்திக்கு இருந்துவரும் இடையூறுகளை அகற்றுங்கள்.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தலைவர் திரு. நாராயணசாமிநாயுடுவைக் கேட்டுள்ளார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகள் மாநிலம் முழுவதும் தற்போது கிளர்ச்சி நடவடிக்கைகளைமேற்கொண்டு வருவதைத்தொடர்ந்தே திரு. இராமச்சந்திரன் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

விவசாயிகள் கிளர்ச்சிகளை விலக்கத்தவறும் பட்சத்தில் இக்கிளர்ச்சிகளினால் ஏற்படும் விளைவுகளுக்கு விவசாயிகள் சங்கமேபொறுப்பேற்கவேண்டுமென்றும் திரு. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (இ)

## சில மணிநேரம் மட்டும் ஈராக் போர்நிறுத்தம்

# ஈரான் படைகளின் பீரங்கித்தாக்குதலை அடுத்து மீண்டும் உக்கிரமான போர்

### பாக்தாத், தெஹ்றான் மீது விமானத்தாக்குதல்

லண்டன், அக். 6

ஈராக்-ஈரான் யுத்தத்தில் நேற்று சில மணிநேரம் ஈராக் போரை நிறுத்தியிருந்த போதிலும் ஈரானியப் படைகள் தொடர்ந்து பீரங்கித் தாக்குதலை நடத்தியதை அடுத்து இருதரப்பு படைகளுக்கும் உக்கிரமான போர் நடைபெற்றதாக போர்முனைச்செய்திகள் தெரிவிக்கின்றன.

### தெஹ்றான், பாக்தாத் மீது தாக்குதல்

கடும் சமரில் ஈடுபட்டு வரும் ஈராக் படைகள் ஈரானின் தலைநகரான தெஹ்றான் விமான நிலையத்தில் விமானத் தாக்குதல் நடத்தியதாக ஈரான் குற்றஞ்சாட்டியுள்ள அதேவேளையில் ஈராக் தலைநகர் பாக்தாத் மீது ஈரானிய விமானிகள் குண்டுமாரி பொழிந்ததாக ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

### 'ஹொரம்சர்' நகரில் கடும் சண்டை

ஈரானின் துறைமுக நகர[illegible] கடும் சண்டை நடைபெற்று வருவதாகவும் இந்நகரின் தென் பகுதி ஈரான் படையினர் வசமே உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

## இந்தியாவுக்கு குவைத் எண்ணெய்

லண்டன், அக். 6

இந்தியாவின் உடனடித் தேவைகளுக்கு எண்ணெயை வழங்க குவைத் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் விசேட தூதுவராக குவைத் சென்றிருந்த இந்திய வெளிநாட்டு அமைச்சின் காரியதரிசி திரு. ரமேஸ்பண்டாரி இத்தகவலைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கலியுகத்திலே ஒரு மனிதன் ஒரு பகலும் ஒரு இரவும் கடவுளுக்காக அழுது புலம்புவானாகில் அவன் கடவுளைக் கண்டுகொள்ளுகின்றான் என்பர்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### தமிழ் மொழி உரிமை

தனிச் சிங்களச் சட்டம் 1956-ம் ஆண்டு அமுலுக்கு வந்த நாள்தொடக்கம் நாட்டைப் பிடித்த சனியன் இன்னுமே நீங்கவில்லை.

இருபத்துநான்கு மணித்தியாலத்தில் தனிச்சிங்களச் சட்டத்தை அமுலாக்குவேனென்று உறுதிபூண்ட அமரர் பண்டாரநாயக்காவே அது முடியாத காரியமென ஒப்புக்கொண்டார்.

நியாயமான அளவுக்கு தமிழ்மொழி உபயோகிக்க வேண்டிய சட்டமொன்றையும் கொண்டுவந்தார். அந்தச் சொற்கூட்டம் இன்று ஒரு விகடப்பேச்சாக மாறிவிட்டது. நாட்டின் மக்கள் பேசும் மொழி, தேசிய மொழியாக விருந்தால் அது நியாயம கவே உபயோகிக்கப்படவேண்டு மென்பது ஒரு பிரஜையின் அடிப்படை உரிமை.

இன்று வரைக்கும் நாட்டின் தமிழ் பேசும் மக்கள் போராடிக்கொண்டிருப்பது தமிழ்மொழிக்கு நேரிட்ட அநியாயம் குறித்தே.

மூன்று வருடங்களுக்கு முன் ஆட்சிக்கு வந்த ஐ. தே. கட்சி மொழி உரிமை பற்றிய அநீதிகள்அனைத்தும் நீக்கப்படுமென வாக்குறுதி அளித்திருந்தது. அந்த வாக்குறுதியை இலகுவில் நம்பி மக்கள் ஏமாந்து விட்டனர் என்று சொல்வதற்கில்லை.

இந்த நாட்டின் பொது வாழ்வில் தமிழ் மக்கள் தக்க இடம் வகிக்கின்றனர் என்ற உணர்வு எப்போது உதிக்கின்றதோ அப்போது தான் இவ்வித வாக்குறுதிகள் வலிமை பெற்றன வாகும். அந்த உணர்வு இன்று வளர்ச்சியடைவதாக பிரசாரம் நடைபெறுகின்றது. சோதனை எந்த நிலையில் இருக்கின்றது என்பதே கேள்வி.

அரசியலமைப்புச் சட்டத்தில் தமிழ் மொழிக்கு தேசிய அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. மூன்று வருடகாலத்தில் இந்த அந்தஸ்து என்ன பலன் அளித்திருக்கிறது?

தமிழ் மக்கள் அரசுடன் தமிழில் தொடர்புகொள்ளும் எந்தக் கடிதத்துக்கும் தமிழில் மறுமொழி கிடைக்கின்றதா? அரசின் கடிதங்கள் தமிழில் கிடைக்கின்றதா?

அவ்வளவுதூரம் போகவேண்டிய அவசியமில்லை. தலைநகரிலேயுள்ள அரசாங்க திணைக்களங்களின் பெயர்ப் பலகைகள் எல்லாவற்றிலும் தமிழ் இடம்பெற்றுள்ளதா? இ. போ. ச. பஸ்கள் சிலவற்றின் பெயர்ப்பலகைகள் தனிச்சிங்களத்தில் காட்சியளிக்கின்றன.

பிரதமமந்திரியின் செயலகத்திலிருந்து வீடமைப்பின் விடயமாக ஒருதமிழ்ப்பகுதியிலுள்ள கிராமசபைக்கு எழுதப்பட்ட கடிதம் தனிச்சிங்களத்திலே கிடைத்திருக்கின்றது என்ற புகார் செய்தியாக எமக்குக் கிடைத்திருக்கிறது.

தமிழ்மொழி சம்பந்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டம் சரிவர அமுல் நடத்தவே தமிழ் அமைச்சர் திரு. செ. இராசதுரை நியமிக்கப்பட்டார். உடனடி நிவாரணம் கிடைத்துவிடுமென்று நாம் நம்பி மோசம் போகவில்லை ஆயினும் நிலைமை திருந்த வேண்டிய இடத்தில் அது மோசமடைவது பெரும் விசனத்துக்குரியது.

அரசாங்கத்தை நாம் திட்டுவதில் மகிழ்ச்சியோ பலனோ அடைவதில்லை. இந்த நிலையை எவ்வாறு மாற்றி அமைக்கலாமென்பதே எமது அவசிய கவலை. திணைக்களங்களுக்குப் போதுமான தமிழ் ஊழியர்கள் நியமிக்கப்படவேண்டும். வடக்கு கிழக்கு மகாணங்களிலும் தமிழ் மக்கள் பெரும் பான்மையாக வாழும் ஏனைய பகுதிகளிலும் அரசாங்க திணைக்கள தமிழ் அதிகாரிகளும் ஊழியர்களும் தமிழில் கருமமாற்றமுன் வருவதில்லை என்ற புகார் பரவிவருகிறது.

இது எவ்வளவு தூரம் உண்மை என்பது அவசியம் ஆராயப்படவேண்டியது. இந்தக் கடமையை மக்கள் உரிமையை துஷ்பிரயோகஞ் செய்யும் எந்த ஊழியனும் தண்டனைக்குள்ளாக வேண்டும்.

'சிங்கள அரசு' என்று நாம் பல்லாண்டுகளாக ஓலமிட்டுக் கண்டபலன் ஒன்று மில்லை. இந்த விடயத்தில் எமதுமக்கள் தங்கள் கடமையைச் செவ்வனே புரிகிறார்களா என்பதையும் கவனிக்க வேண்டும்.

பொதுமக்கள் அதிகாரிகள் ஆங்கில மோகத்தைக் கைவிட்டுத் தமிழில் பேசி எழுதிக் கருமமாற்ற சங்கற்பம் செய்து கொண்டால் தமிழ்மொழி உரிமை தானாகவே தழைக்கும்.

(நேற்றைய தொடர்ச்சி)

புதிய துரிதமாக்கல் திட்டத்தின் முக்கியஅம்சங்களில் ஒன்ருக ஐந்து புதிய நீர்த்தேக்கங்களும் அமைக்கப்படவுள்ளன. மதுறுஓயா நீர்த்தேக்கம், மொரகஹந்த நீர்த்தேக்கம், ரந்தெனிகல தேக்கம், விக்ரோறியா தேக்கம், கொத்மலை தேக்கம் என்பனஅவையாகும், இவற்றிற்கு முறையே கனடா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரித்தானியா, சுவீடன் போன்ற வெளிநாடுகளும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கிவருகின்றன. இந்தப் புதிய நீர்த்தேக்க அங்குரார்ப்பண வேலைகள் நிறைவேறியுள்ளன. முன்னர் குறிப்பிட்டவாறு C பிரிவு வேலைகள் பூரணமாக்கப்பட்டதும் தொடர்ந்து முறையே C, A, D பிரிவுகள் அபிவிருத்தி செய்யப்படும்.

### நெல் உற்பத்தியில் தன்னிறைவு

மகாவலி திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நன்மைகள் பல. அதன் காரணமாகவே இது ஓர் பல நோக்கு ஆற்று அபிவிருத்தித் திட்டமெனவும் அழைக்கப்படுகின்றது. புராதன குளங்களைப்புனருத்தாரணம் செய்வதன் மூலமும் புதியகுளங்கள், கால்வாய் மூலமும் போதியளவு நீரைப் பெருத நிலங்களுக்கு நீர்வழங்கப்படும். தற்பொழுதுசெய்கை பண்ணப்படும் நிலங்களும் புதிதாக நீர் வளத்தைப் பெறும் நிலங்களையும் சேர்த்தால் முழுமையாக வளம்பெறும் நிலம் 6,54,000 ஏக்கர்கள் ஆகும். இதில் 29 வீதமான பகுதியில் நெல் பயிரிடப்படும். முன்னர் ஒருபோக நெற்செய்கைக்கே திருப்திகரமாக நீரைப்பெருத நிலங்கள் இத் திட்டத்தால் இரு போகமும் போதியளவு நீரைப்பெறும். இதனுல் நெல் உற்பத்தியில் பூரணதன்னிறைவும் கிட்டும்.


### சந்தைப்படுத்த வசதிகள்

இன்னுமொரு 16 வீதமான நிலத்தில் நெல்லுடன் பணப் பயிர்களும் கலப்பான முறையில் செய்கை பண்ணப்படும். பணப்பயிர்களில் பருத்தி, புகையிலை, வெங்காயம், மிளகாய், அவரை, நிலக்கடலை பருப்புவகைபோன்றவைகுறிப்பிடத்தக்கவை. இவற்றைவிட 50 வீதமான நிலப்பரப்பில் சுழல் முறையில் தனித்த பணப்பயிர்கள் இடம்பெறும். பணப்பயிர்களது உற்பத்தியால் இறக்குமதிச்செலவுகளைக் குறைக்க முடிவதுடன் உற்பத்தித் தொழில்களையும்ஆரம்பித்தல் எளிதில் சாத்தியமாகும். மற்றுமொரு 3வீதமான நிலப்பரப்பு நீர்ப்பாசன வசதி பெறும் மேய்ச்சல் நிலங்களாகவும் எஞ்சிய 2 விதமானநிலம் கரும்புச் செய்கைக்கும் ஒதுக்கப்படும். இவ்வாறு பயிர்களுக்கு போதிய நீரை வழங்குவதோடல்லாமல் பயிர்ச் செய்கையோடு தொடர்பான விரிவாக்க சேவைகளையும் சந்தைப்படுத்தலுக்கேற்ற வசதிகளையும் வழங்குதல் திட்டத்தின் நோக்கங்களேயாகும்.

### மின்சக்தி உற்பத்தி

இலங்கையில் போதியளவு உள்ளார்ந்த நீர்மின்வளம் இருப்பதாகக் கூறப்பட்டினும் உற்பத்தியளவு குறைவாகவே உள்ளது. இக் குறையையும் மகாவலித்திட்டம் திருப்தி செய்யக்கூடியதாகும். மத்திய உயர்நிலத்தில் 50மைல் தூரத்திற்கு 6000 அடிக்கு நிலம் தாழ்வடைவதால் ஏற்படும் [illegible] குத்தான சாய்வுகளும் அவற்றின் வழியாக ஏற்படும் வற்றுத நீர்ப்பெருக்கும் நீர்மின் உற்பத்திக்கு உதவுகின்றன. இதைவிட நீர்த்தேக்கங்களிலிருந்தும் மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும். திட்டமிடப்பட்டுள்ள படி 380 மெகா வாற் மின்சக்தியை உற்பத்தி செய்யலாம். அதாவது செக்கனுக்கு 1290 கிலோவாற் வலுவினைப்பெறலாம். இது குடியிருப்பு பகுதிகட்கும் உற்பத்திக் கைத்தொழில்களுக்கும் பெரிதும் பயனளிப்பதாக இருக்கும்.

இலங்கையில் இன்று நகர்ப் பகுதிகளில் குடிநெருக்கம் விரைவாக ஏற்பட்டு வருகின்றது. 1971ல் 17 வீதமாக இருந்த நகர மக்களது பங்கு இன்று 22 வீதமாக அதிகரித்துள்ளமை இ... துக் காட்டும். ... வேலை வாய்ப்', ... கள் போன்றவற்... கம் அதிகரிக்கின்... றுல் நிலவாட... சூழல் மாசுபடு... சிகல்களும் ஏற்... மக்களை நாடெ... க் குடியேற்று... வாக அமைய... வடிநிலமும் இ... மாக விளங்கு... ஏறத்தாழ 14 ... தொழிலுடன் ... படுவர். இக்... கொத்துக் ... யும். 100 ... சேர்ந்தது ஒரு... வும் பெயர் ... றுல் கிராமிய... ரத்தை வளப்... முடிவதுடன் ... பாட்டையும் ... மைய இடங்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...தின் மூலம் ...பேணலாம்

ஏற்படும் ...கும் நீர் ...டதவ,கின் ...நீதேக்கங் ...சக்தியை ...டி யு ம். ...படி 380 ...யை உற் ...அதாவது ...லாவாற் ...இது ...ம் உற்

...ம்

...ல்களுக் ...ப்பதாக

நகர்ப் ...நருக்கம் ...வருகின் ...மாக ...பங்கு ...அதிகரித்

துள்ளமை இதனை எடுத்துக் காட்டும். நகரங்களில் வேலை வாய்ப்ட', சேவை வசதிகள் போன்றவற்ருல் நெருக்கம் அதிகரிக்கின்றது. இவற்ருல் நிலவாடகை உயர்வு, சூழல் மாசுபடுதல் போன்ற சிக்கல்களும் ஏற்படும். இதற்கு மக்களை நாடெங்கும் பரவலாகக் குடியேற்றுதல் ஏற்ற தீர்வாக அமையும். மகாவலி வடிநிலமும் இதற்கேற்ற இடமாக விளங்குகின்றது. இங்கு ஏறத்தாழ 14 லட்சம் மக்கள் தொழிலுடன் குடியமர்த்தப் படுவர். இக்குடியிருப்புக்கள் கொத்துக் கொத்தாக அமையும். 100 குடியிருப்புக்கள் சேர்ந்தது ஒரு சிறு கிராமமாகவும் பெயர் மாறு . இவற்ருல் கிராமிய பொருளாதாரத்தை வளம் பெறச் செய்ய முடிவதுடன் பிரதேச சமன்பாட்டையும் பேண முடியும். மைய இடங்கள் உண்டாகும் பொழுது விவசாய வேலை தவிர்ந்த 2-ம், 3-ம் படி தொழில்கள் வேலைவாய்ட யைக் கூட்டும் என்பதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இயற்கைச் சூழல் சீரழிகிறது

தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் மகாவலித் திட்டத்தால் இயற்கைச் சூழல் ஓரளவு சீர்குலைக்கப்படுவதை யாரும் மறுக்க முடியாது. ஆயினும் அதனை ஈடு செய்வதற்கும் பாதுகாப்பதற்கும் இத்திட்டத்தில்முக்கிய இடம் வழங்கப் பட்டுள்ளது. குறிப்பாக அழிக்கப்படும் காடுகளை மீள வனமாக்கும் முயற்சியில் 'மரம் நாட்டும் இயக்கம்' போன்றனவற்றை ஊக்குவிக்கின்றனர். மகோகனி, யூகலிப்ரஸ் போன்ற மரங்கள் இவ்வாறு பயிரிடப்படுகின்றன. வனபரிபாலன சபை, காட்டிலாகா போன்றவற்றுடன் தனிப் பட்ட நிறுவனங்கள், சபைகள் கூட இப்பணியில் ஈடுபட்டுள்ளன.

## திட்டத்தை நடைமுறைப்படுத்த பிரச்னைகள்

மகாவலித் திட்டம் வழங்கும் பல நன்மைகளையும் நோக்கும்போது அது மிகவும் அவசியமானது என்பதுடன், தற்போதைய நிலையில் இன்றியமையாதது என்பதும் புலனுகின்றது. ஆயினும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சில பிரச்சனைகளையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது. நீண்ட காலமாக குடியேற்ற நாட்டு ஆட்சிக்கு உட்பட்டு இருந்தமையால் பாரம்பரிய நாகரிகம் புறக்கணிக்கப்பட்டதால் அதை மீட்பது கஸ்டமாக உள்ளது. இதைவிட ஏற்ற விஞ்ஞான அறிவும் பொறிமுறை அறிவும் இல்லாமை, நிதிப்பற்ருக்குறை போன்றனவும் இதில் முக்கியமானவை. இந்த நிலையிலும் திட்ட நிறைவு பெறவேண்டியது அவசியமாதலால் பலரது ஒத்துழைப்பும் நல்லாசிகளும் அவசியமாகின்றன. இத்திட்டத்தின் வெற்றியிலேயே இலங்கையின் ஏனைய ஆற்று வடிநில அபிவிருத்திகள் தங்கியிருக்கின்றன. ஏனைய ஆறுகளையும் கட்டுப்படுத்தி நீர் குறைந்த பகுதிகளுக்கு நீரைக் கொடுக்கக் கூடிய ஆற்றலும் அறிவும் எம்மிடத்தில் இருக்கின்றது என்பது மகாவலித்திட்டத்தை ஒப்பேற்றும் பொழுது தெளிவாகின்றது. இலங்கைத் திவுக்கு வேண்டிய மின் சக்தியை ஒரு வலைப் பின்னல் அடிப்படையில் அமைப்பது போப்ல, நாடுபெறும் மழை நீரையும் விநியோகிக்க முழு நாட்டுக்கு ஒரு திட்டம் வகுத்து நிறைவேற்றுவது வேண்டியது. மகாவலியினூடாக நாடு கற்கும் பாடம் இதுவேயென்பது சுட்டிக்காட்டவேண்டியது. ஆதலினுல், நாட்டு மக்களும் இதில் பெருமைப்படுவதுடன் ஒத்துழைப்பையும் நல்க வேண்டும்.

## வலைத்திருட்டைத் தடுக்க நடவடிக்கை

(நேல்லியடி)

தொண்டமானுறு தொடக்கம் பருத்தித்துறை பகுதிவரையுள்ள மீனவர்களின் வலைகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன அடிக்கடி திருட்டுப்போவதனைத்தடுக்க நடவடிக்கைஎடுக்கப்படவுள்ளது.

திருட்டுக்களைத் தடுத்து நிறுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய, யாழ். மீன்பிடி விரிவாக்க உத்தியோகத்தர் திரு. கே: பிலிப் தலைமையில் வல்வெட்டித்துறையில் இம்மாதம் 13ம் திகதி மகர்நாடொன்று கூட்டப்பட்டுள்ளது.

இம்மகாநாட்டில் வல்வெட்டித்துறை நகரசபைத்தலைவர் திரு' ச. ஞானமூர்த்தி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. கணேசம, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும், மீன்பிடிஉத்தியோகத்தர்கள் உட்படப்பலர் பங்கு பற்றுவார்கள்.

## "சோதனை மிக்க காலம்"

(நெல்லியடி)

"மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தமிழர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பெரும் சோதனை மிக்க காலம் ஆரம்பித்துவிட்டது. சமீபத்தில் நடைபெற்ற வெகுஜன இயக்கப் பிரதேச மாநாட்டில் மாவட்ட சபைகள் பற்றி அபாய அறிவிப்பு முன்வைக்கப்பட்டபோது, இதற்குச் சமாதானம் கூறும் விதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரம் அளித்தவாக்குறுதி, இன்றுவரை அமுல் நடாத்தப்படாதது ஒன்றே மாவட்ட சபைகளின் அபாயத்தை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மேலும் நினைவூட்டுவதாக அமைகிறது."

இவ்வாறு வதிரி பொஸ்கோ

(8-ம் பக்கம் பார்க்க)




1980, ஒக்டோபர் 1ம் தேதி முதல், தாமாக முன் வந்து வாசக்டமி அல்லது டியுபெக்டமி கருத்தடை முறைகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு கணவன் மனைவிக்கும் அரசாங்கம் ரூபா 500 வழங்க இருக்கிறது உறுதியான நாட்டில் ஆனந்தமான குடும்பத்தைக் கடடியெழுப்புவதற்கான முயற்சி.

அரசாங்க வைத்தியசாலை, தனியார்துறை வைத்தியர், மருத்துவமனை, அல்லது அங்கிகாரம் பெற்ற வேறு நிறுவனம், டியுபெக்டமி அல்லது வாசக்டமி செய்யப்பட்டதென, அங்கிகரிக்கப்பட்ட படிவத்தில் உறுதிப்படுத்தினுல், இப் பணத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையவராவீர்கள்.

தொழில் புரியாதவர் அல்லது சுய தொழில் புரிபவர் இப பணத்தைக் கச்சேரியிலோ அல்லது உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம் தொழில் செய்பவராக இருந்தால் தொழிலுக்கு அமர்த்தியவரிடம் பெறலாம். அரசாங்கம் அப்பணத்தை அவருக்கு வழங்கும் உங்களை தொழிலுக்கு அமர்த்தியவர் அப் பணத்தைச் செலுத்த முடியாமலிருந்தால், கச்சேரியிலோ, அல்லது உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம். கொழும்பிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ளவர்கள் திட்ட அமுலாக்கல் அமைச்சின் சனத்தொகைப் பிரிவுடன் தொடர்பு கொண்டு பணத்தைப்பெறலாம்.

இலங்கைக் குடும்பத்திட்டச் சங்கத்தில் மேற்கொள்ளும் போது பணம் உடனடியாகச்செலுத்தப்படும். தாமாக முன் வந்து கருத்தடையை மேற்கொள்வோருக்கு மேலும் பல நன்மைகள் காத்திருக்கின்றன. வழமையான ஒய்வு நாட்கள் உட்பட வாசக்டமி செய்து கொள்ளும் ஆண்களுக்கு மேலும் 3 முழுச் சம்பளத்துடன் கூடிய ஒய்வு தினங்களும், டியுபெக்டமி செய்துகொள்ளும் பெண்களுக்கு மேலும் 7 முழுச் சம்பளத்துடன் கூடிய ஒய்வு தினங்களும் வழங்கப்படும்.

1978, ஜனவரி 1ம் தேதிக்குப் பின்னர் திருமணப் பதிவு செய்து கொண்ட, அரசாங்க, தனியார்துறை ஊழியர்கள், ஓய்வு பெறும் சமயத்தில் இரண்டிற்கு மேற்படாத பிள்ளைகளுடன் இருந்தால் 10% அதிகரித்த ஒய்வூதியத்தை அல்லது சேமநல நிதியை அவர்களுக்கு வழங்குவது மற்ருெரு ஊக்குவிப்பு நடவடிக்கையாகும்.

டியுபெக்டமியும் (பெண்கள்) வாசக்டமியும் (ஆண்கள்) முழுமையான பாதுகாப்பும், நம்பகமதானகருத்தடை முறைகளாகும். உங்கள் தேகாரோக்கியத்தையோ, மகிழ்ச்சிகரமான வாழ்க்கையையோ எந்த வகையிலும் அவை பாதிக்கமாட்டா, கடந்த ஆண்டு இலங்கையில் 35,000க்குக் குறையாத ஆண்களும், பெண்களும் தாமாக முன்வந்து கருத்தடையினை மேற்கொண்டுள்ளார்கள். மிக இலகுவானதும் நம்பகமானதும் என்ற காரணத்தால் இவை பிரபல்யமடைந்துள்ளன.

**தாய்சேய் இருவரின் சௌக்கியத்தை உறுதிப்படுத்தவும், குடும்ப வாழ்க்கையின் தரத்தை உயர்த்தவும் எடுக்கப்படும் நடவடிக்கை இதுவாகும்.**

**கருத்தடைசெய்ய முன்வாருங்கள் ஆனந்தமான குடும்பம் நிலத்திருக்க வழிசெய்யுங்கள்.**

PHOENIX



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாணவி கமலம் கொலைவழக்கு:

# "கமலத்திற்கும் எனக்குமுள்ள காதல்தொடர்பு துண்டிக்கப்படவில்லை"

## காதலன் சசிதரன் சாட்சியம்

(புலோலி நிருபர் திருச்செல்வம்)

"கமலம் கொலை தொடர்பாக எனக்குத் தெரிந்தனவற்றையும் ஞாபகத்தில் உள்ளனவற்றையும் பொலிசிற்கும், நீதிமன்றத்திற்கும் எதுவித ஒளிவு மறைவுமின்றிக் கூறிவிட்டேன்."

இவ்வாறு பொலிகண்டி டியூட்டறி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த கொலையுண்ட கமலத்தின் காதலனை திருநாவுக்கரசு சசிதரன் 2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவினால் குறுக்குவிசாரணை செய்யப்படும்போது குறிப்பிட்டார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது.

சட்டத்தரணி ஸ்ரீசிவாயா தொடர்ந்து சாட்சியான சசிதரனைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்:- நீங்கள் 1-3-80ல் பொலிசாருக்கு வாக்குமூலம் கொடுத்தது ஞாபகமாக இருக்கும்? - ஞாபகமில்லை,

சட்;- உங்கள் நண்பன் அரவிந்தன் சொன்னது பிழையான விடயம் என்று உடனே உங்களுக்குத் தெரியும்? - ஆம்.

சட்:- உங்களுக்கும் கமலத்திற்கும் இடையேயிருந்த காதல் தொடர்பு 1979 டிசம்பர் மாதம் அளவில் துண்டிக்கப்பட்டதா? - இல்லை.

சட்:- நீங்கள் முதல் கமலத்திற்கு 6-10-89ல் கடிதம் எழுதினீர்கள்? - ஆம்.

சட்:- நீங்கள் கமலத்திற்கு 4, 5 கடிதங்கள் எழுதினீர்கள்? இல்லை. இரண்டு கடிதங்கள்.

சட்:- 21-2-80 அன்று வல்வெட்டித்துறையிலிருந்து பருத்தித்துறைக்கு வந்தீர்கள்? - ஆம். வந்து பருத்தித்துறையில் குமார் அச்சகம் வைத்திருக்கும் எனது அக்காவின் கணவரான காந்திதாஸனிடம் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு புற்றளைக்கு கமலேஸ்வரனின் தாயாரின் மரணச்சடங்கில் கலந்து கொள்ளச் சென்றேன்.

சட்.:- நீங்கள் பல்கலைக்கழகத்தில் அக்பர் மண்டபத்தை விட்டு வெளியேற உத்தரவு எடுத்தீர்களா? - இல்லை.

சட்:- ஏன் எடுக்கவில்லை? நாங்கள் வெளியே போவதற்கு அப்படி உத்தரவு எடுப்பதில்லை.

சட்:- நீங்கள் கடந்த திங்கட்கிழமையும் இங்கு (வல்வெட்டித்துறைக்கு) வந்திருந்தீர்கள்? - ஆம்.

சட்:. நீங்கள் 22-2.80 அன்று பயணம் போக பஸ்சிற்கு நின்றபோது யார் யாரைச் சந்தித்தீர்கள்? - மோகன், மத்தியூஸ், குமரதாஸ், சிவராசா ஆகியோரை.

சட்:- மத்தியூஸ் குமரதாஸ் ஆகியோர் எங்கே உங்களைச் சந்தித்தார்கள்? - வல்வெட்டித்துறைச் சந்தியில்.

சட்:- நீங்கள் 21-2-80 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறைக்கு மோகனுடன் வந்ததுபற்றி ஏன் பொலிசாருக்குக் கூறவில்லை? பொலிசார் என்னை அப்படி ஒன்றும் கேட்காதபடியால்.

சட்:- நீங்கள் 22-2-80 குமரதாசுடன் செல்வச்சந்நிதிக்குப் போனதாகவும் கூறவில்லை? - பொலிசார் அது பற்றியும் கேட்கவில்லை.

சட்:- கமலத்தை எப்போ முதல் தடவையாகச் சந்தித்தீர்கள்? - சிங்கள ரியூசனுக்குப் பருத்தித்துறைக்கு வந்தபோது

சட்:, எப்போது? 1979 ஆகஸ்டில்.

சட்:- நீங்கள் இக் கொலை சம்பந்தமான சில உண்மைகளைப் பொலிசிற்கும், நீதிமன்றத்திற்கும் உங்கள் சுயநலம் கருதி மறைத்துள்ளீர்கள்? - இலை. நினைவில் உள்ளவை எல்லாவற்றையும் ஒழிவு மறைவின்றிச் சொல்லிவிட்டேன். (க)

## உடுப்பிட்டியில் முதற்கட்டமாக 80 வீடுகள்

(நெல்லியடி)

தொகுதிக்கொரு மாதிரிக் கிராமம் திட்டத்தின்கீழ் உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள தேவரையாளி கண்ணகை ஆலயப் பிரதேசத்தில் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 80 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

தொகுதிக்கு 30 வீடுகள் நிறுவும் அரசாங்கத்தின் திட்டப்படி பொலிகண்டியைச் சேர்ந்த பாலாவி என்னும் பகுதியில் வீடுகள் நிர்மாணிக்கப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வீடமைப்புக்கானஇடங்களை உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு. த. இராசலிங்கம் சிபார்சு செய்துள்ளார். வீடமைப்புத்திணைக்கள உயரதிகாரிகள் இப்பகுதிகளை பார்வையிட்டுச்சென்றுள்ளனர்.

## யாழ். மேயர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினரின் மதுரை மாநாட்டில், "ஈழத் தமிழர் வரலாற்றுக் கண்காட்சியை" நடத்துமாறு விடுக்கப்பட்டுள்ள அழைப்பை அங்கீகரித்து ஏற்றுக்கொண்டிருக்கும், உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைக்கு சகல உதவிகளையும் வழங்குமாறு யாழ். மேயர் திரு. இராசா விசுவநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளைக்கு மேற்படி பொருட்காட்சியைச் சிறப்பாக ஒழுங்கு செய்வதற்கு வேண்டிய நிதியை அழைப்புக்குக் காத்திருக்காது எமது வர்த்தகப் பெருமக்கள் கொடுத்து உதவவேண்டுமென்றும் அவர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## "சசிதரன் பேராதனை புறப்பட்டபோது கமலம் கொலை பற்றி நான் அறிந்திருக்கவில்லை"

(புலோலி)

"22-2-80 அன்று பிற்பகல் சசிதரனை வல்வெட்டித்துறை பஸ் நிலையத்தில் வைத்துப் பேராதனைக்குப் பயணம் அனுப்பியபோது நான் கமலம் கொலை பற்றிக் கேள்விப்பட்டிருக்கவில்லை."

இவ்வாறு பொலிகண்டி டியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சுப்பிரமணியம் குமரதாஸ் குறிப்பிட்டார்.

1980 பெப்ரவரி மாதம் 21-ம் திகதிக்கும் 22-ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் பொலிகண்டி டியூட்டரி மாணவியான கமலம் இராமச்சந்திரனை (வயது 15) வராத்துப்பளை ஆனைவிழுந்தான் மயானத்திற்கு அண்மையில் கொலை செய்ததாகவும் மாணவி கமலம் அணிந்திருந்த 3600 ரூபா பெறுமதியான தங்க நகைகளை அபகரித்தார் என்றும் பருத்தித்துறையைச் சேர்ந்த கந்தசாமி இராஜ்குமார் (இராஜன்) அல்லது வீரப்பன் அவரது நண்பரான பொன்சியஸ் பெர்ணண்டோ (ரெஜி) அல்லது ரெஜின்சன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் நடைபெற்று வருகின்றது.

1-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினமும் 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் நீதிமன்றத்திற்கு உதவியாகச் சட்டத்தரணி எம். சோமசுந்தரமும், பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எஸ். சண்முகசுந்தரம், எஸ். சிவனருள்சுந்தரம் (கண்மூபன்) செல்விகளான சந்திரா சச்சிதானந்தம், உமா துரைசிங்கம், எல். சீ. பிலிப் ஆகியோர் ஆஜராகி இருந்தனர்.

தொடர்ந்து சாட்சியமளித்த வல்வை இளைஞர் குமரதாஸ் சொன்னதாவது: 21-2-80 அன்று எனக்கு நல்ல ஞாபகமுண்டு. அன்று இரவு 8 30 மணிபோல் சசிதரனும், மோகனும் எனது வீட்டிற்கு வந்து எனது சைக்கிளை எடுத்துச் சென்றார்கள். பின்பு அடுத்த நாள் காலை சசிதரன் எனது வீட்டிற்கு வந்து, நானும் அவருமாகத் தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் சென்றோம். பின்பு அங்கிருந்து புறப்பட்டு 9-30 மணிபோல் வீட்டிற்கு வந்தோம்.

### பயணம் அனுப்பினேன்

சந்நிதியால் வரும்போது சசிதரன் தான் அன்று பிற்பகலே மெயில் புகைவண்டியில் பேராதனைக்குப் போகப் போவதாகச் சொன்னார். ஆனபடியால் அன்று அவரைப் பயணம் அனுப்புவதற்காக நான் வல்வெட்டித்துறை பஸ் நிலையத்திற்கு வந்தேன். அங்கு மத்தியூஸ், மோகன், சிவராசா ஆகியோரும் சசிதரனுடன் நின்றார்கள். நானும் வந்து அவர்களுடன் சேர்ந்துகொண்டேன். அப்போது நான் கமலத்தின் கொலை பற்றிக் கேள்விப்பட்டிருக்கவில்லை.

நான் கடந்த சனிக்கிழமையும் சசிதரனை வல்வெட்டித்துறை வாசிகசாலையில் சந்தித்தேன். அப்போது சசிதரன் தனக்கு கமலம் கொலை வழக்கில் சாட்சியமளிப்பதற்கு நீதிமன்ற உத்தரவு வந்துள்ளதாக எனக்குச் சொன்னார். இவ்வழக்கில் ஏற்கனவே மோகன் நீதிமன்றத்தில் சாட்சியமளித்துள்ளாரென நான் அவருக்குச் சொன்னேன். மோகன் இங்கு சாட்சியமளித்ததை நான் (அ)ங்கிருந்து கேட்டுக் கொண்டிருந்தேன். என்றாலும் சசிதரனுக்கு மோகனின் சாட்சியம் பற்றிய விபரங்களை நான் சொல்லவில்லை. சசிதரன் என்னை அதுபற்றிக் கேட்கவும் இல்லை.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆரோக்கியசாமி ஆமேசன் மத்தியூஸ் சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:-

22-2-80 அன்று நான் சசிதரனை வல்வெட்டித்துறை பஸ் நிலையத்தில் பி. ப. 5 மணிக்கு சந்தித்தேன். நான் பந்தடிப்பதற்கு அவ்விடத்தால் போகும்போதே சசிதரனைச் சந்திக்க நேர்ந்தது. அவர் பேராதனைப் பல்கலைக்சழகத்திற்குப்போவதற்குபஸ்ஸிற்குக் காத்து நின்றார். அவருடன் சிவராசா, நான், மோகன், குமரதாஸ் ஆகியோரும் நின்றோம்.

அன்று மத்தியானமே பொலிகண்டியைச் சேர்ந்த பெண்பிள்ளை ஒன்று கொலை செய்யப்பட்டதாகக் கேள்விப்பட்டேன். ஆனால் இக்கொலை பற்றி அங்கு கூடிநின்றபோது நாங்கள் கதைக்கவில்லை. நாங்கள் எல்லோரும் ஒரே நேரத்தில் பஸ் நிலையத்தில் கூடவில்லை. (கு)

## மாணவர்க்கு வைத்திய சோதனை

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் நாளை புதன்கிழமை பாடசாலை மாணவர்களுக்கான இலவச வைத்திய பரிசோதனையொன்றை நடாத்துகின்றது. 4000 மாணவ, மாணவிகள் இந்த வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். (கு)


# புதிய யமஹா

ரூபா 1000/- குறைக்கப்பட்டிருக்கின்றது



RD. 125 ரூபா 16,500/-

RD. 200 ரூபா 21,000/-

RD. 250 ரூபா 24,500/-

பினுன்ஸ் வசதிகள் உண்டு

குறிப்பிட்ட தொகையே கைவசமுண்டு. தேவைக்கு முந்துங்கள்!

# த பினுன்ஸ் கம்பனி லிமிட்.,

249 C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 7680)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**WINDSOR** (JAFFNA)
Daily at 10-30 a m, 2-00, 4 30, & 7-00 p m only
SUSAN HAMPSHIRE, FRANK FINLAY, MICHAEL PETROVITCH
in
**"NEITHER THE SEA NOR THE SAND"** Adults only Color

**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7642
தினசரி 4 காட்சிகள்
100-வது வெற்றித் திருநாளை நோக்கி......
"வெள்ளி விழா"
**நீயா?** வண்ணச்சித்திரம்
Next Attraction: "THE DIRTY DOZEN"
எதிர்பாருங்கள்: திசைமாறிய பறவைகள் கலர்

**ராணி** - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
**சட்டம் என் கையில்**
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
தினசரி 4 காட்சிகள்
**ராஜா** (யாழ்ப்பாணம்)
கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
**வண்டிக்காரன் மகன்**
(ஈஸ்மன் கலர்)

**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
**THE DEEP**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சாவித்திரி
**காத்தவராயன்**

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
**MAN ABOUT THE HOUSE**
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 21-ம் திகதி
(செவ்வாய்க்கிழமை)
(7 - 10 -1980)

மேடம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வநம்பிக்கை மேலிடும். நிதானத்தைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

இடபம்: தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்குவழிகோலப்படலாம். இதன் மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கும். பேட்டி காண்பதற்கு ஏற்றதினம்.

மிதுனம்: இரக்க சிந்தை மேலிடும் புத்திர வழி மூலம் பொருள் வரவிற்கும் இடமுண்டு. நல்ல நாள்.

கடகம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித்தலையீடும் தென்படும். உங்களைப்பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவர். அதிக பேச்சு ஆபத்திற்கு இடமளிக்கும்.

சிங்கம்: கரும்பாக இனித்தது இன்று வேம்பாகக் கசக்கக்கூடும். மனப் போராட்டத்தினால் வேதனைப்படுவீர்கள். அதிக முயற்சி எடுத்தாலும் அற்ப லாபமே அடைவீர்கள். முன்னெச்சரிக்கை வேண்டும்.

கன்னி: மேடைப் பேச்சாளர் இன்று பெரும் புகழ் அடைவர். நாடகக் கலைஞர்களுக்கு நன்மையான தினம். இனபந்துக்களின் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு.

துலாம்: எதிர்பாராதவகையில் பொருள் விரயமாகும். வியாபாரத் துறையில் பிணக்குகள் தோன்றும். குடும்பத்தில் கவலைக்கிடமுண்டு. சுகாதபரம் விரும்பத்தக்கது.

விருட்சிகம்: தடைப்பட்ட காரியங்கள் நல்ல முடிவுக்கு வரும், தாய்வழிப் பெருமையும் உண்டு. வாகன நலத்துடன் வரவில் சுகமும் காணலாம்.

தனுசு: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும், புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி தவழும். நீண்டநாள் ஆசை இன்று பலித்திடும்.

மகரம்: தானிய நஷ்டத்தால் கவலைகள் தலைதூக்கும், ஆயுத பீடைக்கும் இடமுண்டு. எதிலும் அவதானம் வேண்டும்' சமயோசித புத்தியினால் எதையும் சமாளிக்கவும்.

கும்பம்: சந்திப்பின் மூலம் பயன்உள்ள தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்குக் களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும். களத்திரத்தால் சுகமும் உண்டு.

மீனம்: கழுகுப் பார்வை வட்டமிடும். கடமையில் தடைகள் ஏற்படும். முடிந்த வரையில் வழக்கு விவகாரங்களை இன்று தவிர்த்துக்கொள்ளவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# அபிவிருத்தியில் பெரிய திட்டம் மாவலியே!

## யாழ். மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"நாம் செய்யும் அபிவிருத்தி வேலைகளில் மிகப்பாரிய திட்டம் மகாவலி திட்டமாகும்" யாழ். மத்திய கல்லூரி பொருட்காட்சி திறப்புவிழாவில் யாழ். மாவட்ட அமைச்சர் திரு.யூ. பி. விஜயக்கோன் மேற்கண்டவாறு கூறினார்.

மாவட்ட அமைச்சர் திரு. யூ. பி. விஜயகோன் மேலும் கூறியதாவது:

"கடந்த 2500 ஆண்டுகளாக ஆட்சிபுரிந்த அரசர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு பெரும் பாடுபட்டார்கள். இந்த நாட்டின் எந்தப்பகுதியிலும் வாவிகளை ஏரிகளைக் காண்கிறோம்.

'பெரியவாவிகளான 5 வாவிகள் கொண்ட பெரிய திட்டம் இது முன்னொருகாலத்திலுமில்லாதவாறு ஜனாதிபதி எண்ணத்தினால் இத்திட்டம் உருவாகியுள்ளது. இந்தப் பாரிய வேலைத்திட்டத்தை இளம் அமைச்சர் பொறுப்பேற்றுள்ளார் மக்களும் மாணவர்களும் இத்திட்டம் பற்றி அறிந்து கொள்வதற்காக இப்பொருட்காட்சி இடம் பெற்றுள்ளது. இப்பாரிய திட்டத்தினால் பெரிய அபிவிருத்திக்கு இடமுண்டு.'

கல்விப்பணிப்பாளர் திரு. சிவநாதன் கூறியதாவது மகாவலி திட்டத்தின் நன்மைகள் பற்றி அறிய பொருட்காட்சி உதயமாக இருக்கும்.

மகாவலித்திட்டம் மகா வலிமையுடைய திட்டமாகும் உலகில் சமுதாய அடிப்படையில் ஆறுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. எகிப்து நாட்டில் நைலும் இந்தியாவில் இந்து நதியும் இலங்கையில் மகாவலியும் முக்கிய இடம் பெற்றுள்ளன. இலங்கை மக்கள் எல்லாருக்கும் இம்மகாவலி திட்டம் மூலம் பெரும் நன்மை கிடைக்க விருக்கிறது. (க)

# "மாவட்ட அபிவிருத்திச்சபைகள்: அதன் செயல்பாட்டில்தான் வெற்றி தங்கியுள்ளது"

(நெல்லியடி)

'மாவட்ட அபிவிருத்தி சபைகள் தமிழ் பேசும் மக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்யும் அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இம்மாவட்ட அபிவிருத்தி சபைகள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு சோதனையை ஏற்படுத்தியுள்ளது.'

மேற்கண்டவாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் வெள்ளிவிழா வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'மாவட்ட அபிவிருத்தி சபையை எங்ஙனம் செயல்படுத்தப்போகின்றோமென்பதிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது. தமிழ் பேசும் இனம் ஆண்டாண்டு காலமாக தமக்குள் ஒரு பகுதியினரை அடக்கி ஒதுக்கிவைத்துவந்தது. அவர்களுக்கு இம்மாவட்டசபைகளில் போதிய இடம் கிடைக்குமா என்பதுதான் இப்போதைய கேள்வி. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு போதிய இடம் கொடுக்காது தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தைமுன்னெடுத்துச்செல்ல முடியாது. அதற்குரிய பக்குவத்தையும் அடையமுடியாது.

'தமிழ் பேசும் மக்கள் உலக நாடுகளில் இம்சைக்குள்ளாகி அவஸ்தைப்படுவதற்குக் காரணம் தமக்குள் ஒருபகுதியினரை நசுக்கி வந்ததேயாகும்.

'தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தமட்டில் எத்தனையோ சோதனை மிகுந்த கட்டங்கள் ஏற்பட்டன. மதமாற்றம் காரணமாக எமது தமிழ் பேசும்மக்களைப் பிரிக்கவும்சில முயற்சிகள் நடைபெற்றன. அவற்றிக்கு இடம்கொடுக்காது அல்வாய் பகுதியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் சைவ சமயத்தைப்பேணி, தமிழ் மொழியையும் வளர்த்து வருகின்றனர். தாம் எவ்வளவு ஒடுக்கப்பட்டாலும் தமது மதத்தையும், மொழியையும் பேணிவளர்த்த நன்றிக்கடனை இவர்களுக்குச் செலுத்தவே இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுகிறேன்.

'1950 ம் ஆண்டு தொடக்கம் இப்பகுதியிலுள்ள மக்கள் தமிழ் மொழியில் பற்றும், சமயப்பற்றும் கொண்டவர்களாகவிருந்து தமிழினத்தின் போராட்டங்களுக்கு தந்தை செல்வாவின் வழியே சிறந்த வழியெனக் கொண்டு, இன்றும் அதனையே தமது கொள்கையாகக் கொண்டுள்ளார்கள்."

இவ்வித்தியாசாலை அதிபர் திரு. எஸ். தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராசலிங்கம், திரு. மு. வரதராஜன் திரு. சி. கணேசமூர்த்தி ஆகியோருட்படப் பலர் உரையாற்றினர். (வெ)


**ஸ்ரீதர்** - யாழ். நகர் கடந்த சிலவருடங்களாக புரட்சிநடிகரின் திரைப் படங்களைப் பார்க்காத ரசிகப்பெருமக்களுக்கு, ஓர் அரிய வாய்ப்பினை ஏற்படுத்தத் தோன்றுகிறேன்.



புரட்சி நடிகர்
எம். ஜி. ஆர்.
கவர்ச்சிக்கன்னி
லதா
மற்றும்
நம்பியார், நாகேஷ்
தேங்காய்சீனிவாசன்,
நிர்மலா, மனோரமா,
ஆகியோர் திறம்பட
நடித்தது
சிறந்த டைரக்டர்
ஸ்ரீதர்
கைவண்ணத்தில்
உருவாகிய
வண்ணப்படைப்பு

**மீனவ நண்பன்**

இசை: M. S. விஸ்வநாதன்

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
தாய்க்கு ஒரு பிள்ளை

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 930
சனி, ஞாயிறு 2-15
ரஜனிகாந்த் - படாபட் ஜயலக்ஷ்மி
ஆறிலிருந்து அறுபதுவரை

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 4-45, 7-15, 9-45
**At the Earth's Core**


# ஐஸ் தொழிற்சாலை

(மன்னார்)

சீ-நோர் ஸ்தாபனம் தலைமன்னாரில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவவுள்ளது. இதற்கான கட்டிட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தாராளமாகக்
கிடைக்கின்றன
ஏசியா சைக்கிள்கள்
(ASIA BIKE)

சீனாவிலிருந்தும், ஜப்பானிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்கள், உதிரிப்பாகங்கள், மின்சார உபகரணங்கள் விற்பனைக்குண்டு.

உங்கள் சைக்கிள்களை தாமதமின்றி நேர்த்தியாக கழற்றிப் பூட்டுவதற்கு நேர்மையான ஸ்தாபனம்.

சி. சண்முகராசா
மடத்தடி, கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.
6970

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

## இளைஞர் சங்க நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை திருக்குறிப்பு இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்கக் காப்பாளர் திரு. மு. சொ. நடராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்:- மு. சிவராசா, உப தலைவர்:- சி. குணசேகரம், இணைச்செயலாளர்கள்:- பொ. ஜெயபாலன், ச. மு. நாகேந்திரன், பொருளாளர்:- க. சிவநாதன், நிர்வாக உறுப்பினர்களாக ஏழுபேர் தெரிவுசெய்யப்பட்டனர். (கு)


டிஸ்கா
ரேடியோ அன் ரீ.வி
டெக்னீஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவானாலும்
உடன் சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## கொடுத்த கடனைக் கேட்டவர் ஆஸ்பத்திரியில்

(நெல்லியடி)

கொடுத்தகடனைத் திருப்பிக் கேட்ட நபரொருவர் கொட்டனால் பலமாகத் தாக்கப்பட்டு, இரத்தக்காயங்களுடன் மந்திகை அரசினர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றார்.

பருத்தித்துறை பொலிஸ்பிரிவிலுள்ள தல்லையப்புலம்வாசியான இராமசாமி ஆனந்தவேல் என்பவரே இவ்வாறு தாக்குண்டு சிகிச்சை பெற்றுவருபவராவார்.

மேற்படி நபர் வைத்தியசாலை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. கே. வல்லிபுரத்திடம் கொடுத்துள்ள வாக்குமூலத்தில் கூறியுள்ளதாவது;:

சம்பவதினம் வேலையால் சென்ற நான் வீரகத்தி என்பவருக்கு கொடுத்த 200 ரூபா கடனைத் திருப்பிக் கேட்டேன். அதற்கு அவர் கொட்டனைக் கொண்டு என்னைப்பலமாகத் தாக்கினார். எனது மனைவி தடுத்தபோதும் அவர் என்னைத் தாக்கினார் எனக்கூறியுள்ளார்.

இத்தாக்குதல் சம்பந்தமாக பருத்தித்துறைப் பொலிசார் மேலும் புலன்விசாரணை செய்து வருகின்றார்கள்.

## மகாதேவா பாலத்தை பூர்த்திசெய்வதற்கு விரைவில் நடவடிக்கை!

### பத்திரிகையாளர் மாநாட்டில் காமினி

(யாழ்ப்பாணம்)

'யாழ் குடாநாட்டில் உவர் நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கான பணம் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை பூநகரி-சங்குப்பிட்டியிலுள்ள மகாதேவா பாலத்தை அமைப்பதற்கும் ஆவனசெய்வேன்.'

இவ்வாறு காணி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா யாழ். செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் உறுதியளித்தார்.

அமைச்சர் இம்மகாநாட்டில் தொடர்ந்து பேசுகையில்கூறியதாவது:

'யாழ் மாவட்டத்தின் தரை அமைப்பின்படி இப்பகுதியில் உள்ள விவசாய நிலத்தில் ரசாயன உரம் பாவிப்பதால் நிலத்திற்குக்கீழ் உள்ள நீரில் நைதரசன் தன்மை அதிகரித்து வருகிறது. அதனால் நீர் அசுத்தமடைகிறது. தொடர்ந்தும் ரசாயனப் பசளை பயன்படுத்தப்படுமேயானால் இப்பகுதி மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படும். அதைத் தவிர்த்துக் கொள்ள கூட்டெரு, சாணம் போன்ற உரங்களைப் பாவிக்க வேண்டும்.

'வடபகுதி மக்களின் நீண்டநாள் வேண்டுகோளான மகாதேவாபாலஅமைப்புவேலையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

'யாப்பாணம் வந்த எனக்கும், எனது பாரியாருக்குப் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலா பக்கங்களிலும் மோக வரவேற்பு கிடைத்தது. இது தமிழ் மக்களின் பண்பை எடுத்துக்காட்டுகிறது. யாழ் மாவட்ட விவசாயிகளின்கடின உழைப்பைப்போன்று வேறு எந்த மாவட்டத்திலும் நான் காணவில்லை' என்று கூறினார். (கொ)

## புனரமைப்பு

(மண்டைதீவு)

வலி-தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவும், உடுவில் கமநலசேவை நிலையத்தினரும் இணைந்து சுன்னாகம், கந்தரோடைக் குளத்தை சிரமதானமூலம் மேற்கொள்ளும் புனரமைப்பு வேலைகள் நேற்று ஆரம்பமாகி நாளைவரை நடைபெறுகிறது.

இச்சிரமதான வைபவத்துக்கு பிரதமவிருந்தினராக யாழ்,மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலான்கலந்து கொள்கின்றார். மற்றும் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், கமநலசேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம், சுன்னாகம் பட்டின சபை உதவி ஆணையாளர் திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். [இ]

## யாழ். மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்மலன்; மாணவர்களின் பிரசனைகளை விளக்கமாக எடுத்துரைத்து, மாணவர்கள் அவரவருக்கு ஏற்ற தொழிலையே நாடவேண்டும். டாக்டர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், பொறியியலாளர்கள், விஞ்ஞான ஆசிரியர்கள் பலர் பொருள் சம்பாதிப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள். திறமைசாலிகள் வெளியேறுவது நாட்டுக்கு நட்டத்தையே விளைவிக்கும். அதை உணர்ந்து இன்றைய இளைஞர்கள் செயல்படவேண்டும்' என்றார். (கொ)

## யாருடையது?

யாழ். மானிப்பாய் வீதியில் ஐந்து சந்திக்கருகில் ஒஸ்மானியாக் கல்லூரி மாணவன் ஏ.சி. பைஸரினால் கண்டெடுக்கப்பட்ட பெரிய திறப்பொன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

ஃ ஃ ஃ

வரையறுக்கப்பட்ட கிறின்லேஸ் வங்கியின் காசோலையொன்று யாழ் மின்சாரநிலைய வீதியிலுள்ள 'நாதன்ஸ்' ஸ்தாபனத்திற்கு முன்பாக இ. பரமேஸ்வரலிங்கம் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

ஃ ஃ ஃ

கண்டிவீதி புங்கங்குளம் சந்திக்கருகாமையில் எஸ். எம். ஜெயம் ஐயரால் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வையொன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

## சோதனை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விளையாட்டரங்கில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் கே. இரத்தினசிறி குறிப்பிட்டார். இக் கருத்தரங்கில் சிறப்புரையாற்றிய திரு. சி. வன்னியகுலம் குறிப்பிட்டதாவது:

காலத்திற்கேற்ப சாதியமைப்பு முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் சாதியமைப்பு முறையை மேன் மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அமைந்துள்ளது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உயர் அரசாங்க பதவிகள் மறுக்கப்படுவதும் அவர்களது மனுக்களை திட்டமிட்டு நிராகரிப்பதில் உயர் தமிழ் அதிகாரிகள் ஐக்கியப்படுவதும் நாம் நடைமுறையில் கண்டவையாகும். மாவட்ட அபிவிருத்திச் சபைகளைப் பற்றி நமது மக்கள் மிக நுணுக்கமாக ஆராயவேண்டும் என்றார். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அமைப்பாளர் திரு. கே. டானியல் உட்பட பலர் கருத்தரங்கிற்கு சமூகமளித்திருந்தனர்.

## ஜனாதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வலை முதுபெரும் அரசியல்வாதி என்றும், அமெரிக்காவில் அவருக்கு அபிமானிகள் உண்டென்றும், ஜனநாயகப் பற்றுமிக்கவர் அவர் என்றும் தெரிவித்துள்ளார்.

## கொராம்ஷா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதையைப் பாதுகாக்க அமெரிக்கா தனது கடற்படையைப் பயன்படுத்தும் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. ஹரோல்ட் பிரௌவுண் தெரிவித்தார்.

ஈராக் - ஈரான் சண்டை பரவுவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என்று அவர் கூறியுள்ளார். (இ)

### டீசல் தட்டுப்பாடு

(ஒட்டுசுட்டான்)

அண்மைக்காலமாகஇப்பகுதியில் டீசல் எண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது, இதனால் விவசாயிகள் தமது வயல்களை உரிய நேரத்தில் விதைப்பதற்குப் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளது.

லண்டன் வாசியிடம் தாபரிப்பு வழக்கு:

## லண்டன் நீதிமன்ற முடிவை மல்லாகம் நீதிபதி ஏற்றார்!

### மீண்டும் சாரணை நடக்கும்

(மாவிட்டபுரம்)

லண்டனில் வசிக்கும் நபர் ஒருவர் இலங்கையிலுள்ள அவரது மனைவிக்கு மாதம் 2000 ரூபா தாபரிப்புப் பணம் செலுத்த வேண்டுமென மல்லாகம் நீதிபதியால் வழங்கப்பட்ட உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு லண்டனிலுள்ள மாஜிஸ்திரேட் நீதிமன்றம் கோரியதையடுத்து இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கெடுக்கப்படவுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்தில் அச்சுவேலியைச் சேர்ந்த ஜெயலோஜனா என்னும் பெண்மணியால் தொடரப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றில் லண்டனில் கணக்காளராகக் கடமையாற்றும் அவரது கணவரான திரு. சி. ஜோர்ஜ் நவரத்தினராசா என்பவரிடமிருந்து மாதம் 3500 ரூபா தாபரிப்பு பணப் பெற்றுத்தரவேண்டுமெனக் கோரப்பட்டிருந்தது.'

இவ்வழக்கு ஏற்கனவே மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டு விசாரணைமுடிவில்மாதம் 2000ரூபா தாபரிப்பு செலுத்தவேண்டுமென உத்தரவிடப்பட்டு; தீர்ப்பு லண்டனுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

லண்டனில் மாஜிஸ்திரேட் நீதிமன்றமொன்றில் நீதிபதி திரு. டபிள்யூ. எஸ். மூர்ட்டிமார் முன் ஆஜராகுமாறு எதிர் மனுதார் பணிக்கப்பட்டதையடுத்து அவர் அங்கு ஆஜராகி வாக்குமூலமளித்தார்.

அங்கு அவர் வாக்குமூலமளித்தபோது

"நான் மனுதாருடன் சமாதானமாக வாழ ஆயத்தமாயுள்ளேன். எனக்கு வேறு மனைவி இல்லை. 12 வருடம் பிரிந்திருந்தால் இனி ஒற்றுமையாக இருக்க முடியாது என்பதை தெரிவிக்கின்றேன். அதுமட்டுமன்றி இடையில் நான் சென்றபோதுஎன்னைமனுதாரும் வேறு மூவரும் சேர்ந்து தாக்கினர். 169 பவுண் பணத்தையும் பறித்தனர். இதையிட்டு ஆராயவேண்டும். மனுதார் க. பொ. த. வகுப்பு வரை படித்துள்ளதால் உத்தியோகம் பார்த்து சீவிக்க முடியும்" என்று தெரிவித்ததாக லண்டன் நீதிமன்றம் மல்லாகம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளது.

இதனையடுத்து இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கெடுக்கப்படவுள்ளது. (கு)

## வவனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளையடிக்கப்பட்ட பணத்தில் 135 ரூபாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

வவனியாவில் இடம்பெற்ற சிகரெட் வான் கொள்ளையில், அண்மையில் குருநாகல் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய இரு சிறை கைதிகள் ஈடுபட்டிருக்கலாமென வவனியாப் பொலிசார் சந்தேகிக்கிறார்கள்.

சிகரெட்வான் கொள்ளையர்களைக் கண்டுபிடிப்பதற்காக வவனியாப் பொலிசார் இப்பகுதி கிராமியத் தொண்டர்களின் உதவியுடன், கொள்ளை இடம்பெற்ற பகுதி முழுவதிலும் தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர் கொள்ளை நடைபெற்ற இடத்தை வவனியா பொலிஸ் அத்தியட்சகர் திரு. சி. பி. வீரசூரியா சென்று பார்வையிட்டார். (வெ)

## மரண அறிவித்தல்

### குமாரசாமி சிவகுமார்

கோப்பாயைச் சேர்ந்த இரசாயன ஆய்வாளர் சிவகுமார் காலமாகிவிட்டார். இவர் முன்னைநாள் அதிபர் க. இ. குமாரசாமி, திருமதி சரஸ்வதி குமாரசாமி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும், மனோரஞ்சிதத்தின் (இரசாயன ஆய்வாளர் K G இன்டஸ்றீஸ்) அன்புக்கணவரும், திருமதி இந்திரா சிவானந்தன் (ஆசிரியை, கிறிஸ்தவ கல்லூரி கோப்பாய்), அரவிந்தகுமாரி (ஆசிரியை, அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி) கிரிஜகுமாரி (ஆய்வாளர், புள்ளிவிபரத் திணைக்களம், கொழும்பு), Dr. வசந்தகுமாரி (அரசினர் வைத்தியசாலை, வாழைச்சேனை), உருத்திரகுமார் (ஐயர் அன் கம்பனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி யோன்பிள்ளையின் மருமகனும், திரு. சிவானந்தன் (அதிபர், இந்துக்கல்லூரி, உரும்பராய்) அவர்களின் மைத்துனரும் ஆவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 8-10-80 புதன்கிழமை பிற்பகல் 2-00 மணி அளவில் கோப்பாயில் நடைபெறும். 7015

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக். 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No G 8948/78 The Eelanaadu P. B. No. 49, Telegram Eelanaadu, Phone. 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org